# பத்திரிக்கைச் செய்தி

## நுகர்வோர் மின்இணைப்பிலிருந்து வணிக மின்இணைப்பாக மாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய மின்வாரிய கணக்கீட்டு ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.ஆன்ட்ரு சந்தோஸ், கே.கே. நகர், திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார், புகார்தாரரின் தந்தை பெயரில் தென்னூரில் இருந்த வீட்டினை தன் பெயருக்கு மாற்றி வாடகைக்கு கொடுத்து இருந்தார். இந்த வீட்டிலுள்ள மின் இணைப்பிணை நுகர்வோர் மின் இணைப்பிலிருந்து வணிக ரீதியான மின் இணைப்புக்கு மாற்றம் செய்ய வேண்டி தென்னூரிலுள்ள மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தில் கடந்த 09.01.2023ம் தேதி விண்ணப்பித்திருந்தார். 18.01.2023ம் தேதி மேற்படி விண்ணப்பம் சம்பந்தமாக கள ஆய்வு செய்ய திரு.ஜெயசந்திரன், கணக்கீட்டு ஆய்வாளர், உறையூர், தென்னூர், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், திருச்சி அவர்கள் கள ஆய்வு செய்து தங்களுடைய விண்ணபத்தினை பரிந்துரை செய்து மேலனுப்ப தனக்கு ரூ.15,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என கூறியுள்ளார். பின்னர் திரு.ஜெயசந்திரன், கணக்கீட்டு ஆய்வாளர் அவர்கள் அவர் கையூட்டாக கேட்ட பணம் ரூ.15,000/-யை ரூ.12,000/-மாக குறைத்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருச்சி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 20.01.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.ஜெயசந்திரன், கணக்கீட்டு ஆய்வாளர் லஞ்ச பணம் ரூ.12,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

## PRESS NOTE

## INSPECTOR OF ASSESSMENT, TNEB TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR CHANGING EB CONNECTION FROM DOMESTIC CONNECTION TO COMMERCIAL CONNECTION

The complainant Tr.Andrew Thomas, residing at K.K.Nagar, Trichy District, had changed one house property at Thennoor from father name to his name and gave the house for rental purposes. On 09.01.2023, he had applied for EB tariff change from domestic to commercial purpose at the EB office, Thennur for his rental house. In continuation of the petition applied by the complainant, on 18.01.2023, one Tr.Jayachandran, Inspector of Assessment of TNEB, Woraiyur @ Thennur, came to his rental house at Woraiyur and demanded Rs.15,000 as bribe for him to do favour in processing the petition of the complainant for changing of tariff from domestic to commercial purpose. After the request of the complainant, Tr.Jayachandran, Inspector of Assessment reduced the demand amount to 12,000/-. But not willing to give the bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Trichy detachment and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized today 20.01.2023. During the trap Tr.Jayachandran, Inspector of Assessment of TNEB, reiterated his demand and received the bribe amount of Rs.12,000/- from the complainant. The accused was caught red handed by the DVAC and remanded to judicial custody.